بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஜுமுஆ பேருரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுமுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

May 16 2014



Biatul Futuh, London

## நபி (ஸல்) அவர்கள் மூலம் தவ்ஹீதை தேடுங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

கடந்த குத்பாவில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பில் மூழ்கிப்போய் திருக்குர்ஆனை விளங்கினார்கள் என்று குறிப்பிட்டேன். திருக்குர்ஆனின் கட்டளைகளை விளங்கினார்கள்; அல்லாஹ்வின் தவ்ஹீதை விளங்கினார்கள். ஏனெனில் தவ்ஹீதின் உண்மையான கருத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஊடகமாகக் கொள்ளாமல் புரிய முடியாது; திருக்குர்ஆனின் அறிவையும் பெற முடியாது. எனவே லாயிலாஹ இல்லல்லாஹ்வுடன் முஹம்மது ரஸூலுல்லாஹ்வை புரிவதும் அவசியமாகும்.

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்தான், லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய உண்மையான செயல்முன்மாதிரி ஆவார்கள். எவ்வாறிருப்பினும், இது சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். அதில் அவர்கள் தவ்ஹீது குறித்து விளக்கியுள்ளார்கள். உண்மையான தவ்ஹீது என்றால் என்ன? எவ்வாறு அமல் செய்வதன் மூலம் மனிதன் ஏகத்துவம் உடையவனாக விளங்க முடியும்? என்று விளக்கியுள்ளார்கள்.

சூரா அன்னாஸின் விளக்கவுரையில் இலாஹின்னாஸின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு, ரப்பின்னாஸ், மலிக்கின்னாஸ், இலாஹின்னாஸ் பற்றி ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நான் கூற விரும்புவதாவது, முதலில் இந்த சூராவில் இறைவன் ரப்பின்னாஸ், பிறகு மலிக்கின்னாஸ், கடைசியில் இலாஹின்னாஸ் என்று கூறினான். இதுவே மனிதனின் அசல் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். அதாவது இலாஹின்னாஸ் என்பதே மனிதனின் இலட்சியமாகும்; இலட்சியமாக இருக்கவும் வேண்டும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இலாஹ் என்பது இலக்கு, வணக்கத்திற்குரியது, தேடுதலுக்குரியது ஆகும். அதாவது நாம் பெற வேண்டிய இலக்கு ஆகும். அதனைப் பெறுவது அவசியமாகும். அதனைப் பெறுவதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். ஓர் ஏகத்துவத்தை உடையவர் முயற்சி செய்ய வேண்டும். இதுவே அவரது தேடுதலாக வேண்டும். எனவே தான், இலாஹ் என்பதன் பொருள் இலக்கு, வணக்கத்திற்குரியது, தேடுதலுக்குரியது என்று கூறப்படுகிறது. லாயிலாஹ இல்லல்லாஹ்வின் பொருள், அல்லாஹ்வைத் தவிர எனக்கு வேறு வணக்கத்திற்குரியதும் இல்லை; இலக்கும் இல்லை; தேடுதலும் இல்லை என்பதாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இதுவே உண்மையான தவ்ஹீது ஆகும். ஒவ்வொரு புகழுக்கும் தகுதி உடையவனாக அல்லாஹ்வையே ஆக்குதல், எல்லா புகழையும் அல்லாஹ்விற்கே ஆக்குதல், அல்லாஹ்வின் பக்கம் செல்லக்கூடிய புகழ்கள் அவனுக்கே அழகு சேர்க்கின்றன. இதுவே உண்மையான தவ்ஹீது ஆகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக்கூடியவன் எல்லா நோய்களையும் அகற்றக்கூடியவன், புகழுக்குரியவன் அவனே ஆவான். அவன் ஒருவனே ஆவான். லாயிலாஹ இல்லல்லாஹ்வின் பொருள் இதுதான். அதாவது, அல்லாஹ்வை எல்லா விருப்பங்களின் இறுதி முடிவாக நம்பப்படும் போது தவ்ஹீது முழுமை அடைகிறது. சூஃபிகள் இலாஹ் என்ற சொல்லிலிருந்து விருப்பத்திற்குரியது; இலக்காக்கத்தக்கது; வணக்கத்திற்குரியது என்ற பொருளை எடுத்துள்ளனர். நிச்சயமாக அதுவே அசலும் உண்மையுமாகும். மனிதன் எதுவரை முழுமையாக இதனை கடைபிடிக்கவில்லையோ அவனிடம் இஸ்லாத்தின் நேசமும், மகத்துவமும் நிலைநிற்காது. லாயிலாஹ இல்லல்லாஹ் உண்மையான முறையில் கடைபிடிக்கப்பட்டால் இஸ்லாத்தின் உண்மை நிலை நின்று விடும். இல்லையென்றால், இவை வெறும் பேச்சுக்களே ஆகும்.

பிறகு இஸ்லாத்தின் உயரிய முழுமையான போதனைகளைக் குறித்து ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இது அல்லாஹ்வின் அருளாகும். இது இஸ்லாம் மூலமாக முஸ்லிம்களுக்கு கிடைத்துள்ளது. இந்த அருளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்கள். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இது முஸ்லிம்கள் பெருமிதம் கொள்ளத்தக்க இடமாகும். கல், மரம், விலங்கு, நட்சத்திரம் அல்லது மரணித்துப் போன மனிதன் முஸ்லிம்களின் இறைவன் அல்ல. மாறாக சர்வ சுதந்திரமும் வல்லமையும் உள்ளவன். அவன் வானங்களையும், பூமியையும் அவற்றிற்கிடையில் உள்ளவற்றையும் படைத்தான். அவன் ஹய்யுல் கய்யூம் ஆவான். முஸ்லிம்களின் ரஸூல் எத்தகையவர் எனில் அவரது நுபுவ்வத் மற்றும் ரிஸாலத் கியாமத் வரை நீடிக்கின்றது. அவர்களது தூதுத்துவம் இறந்து போன தூதுத்துவம் அன்று. மாறாக அதன் பழங்களும் வளங்களும் புத்தம் புதியதாக எல்லாக் காலத்திலும் பெறப்படுகிறது. அது அன்னாரின் உண்மைக்கு எல்லா காலத்திலும் ஆதாரமாகத் திகழ்கிறது. எனவே இறைவன் இக்காலத்திலும் அந்த ஆதாரத்தை நிரூபிக்கும் பொருட்டு பரக்கத்தை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூதை அனுப்பி முஹம்மதியத்தின் நபித்துவத்திற்கு இன்றும் ஆதாரம் தந்துள்ளான். பிறகு அவர்களது வாதம் எந்த அளவுக்கு பொதுவானது எனில் அது முழு உலகிற்குமாக உள்ளது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். கூறுவீராக! நான் உங்கள் எல்லாருக்காகவும் ரஸூலாக வந்துள்ளேன். பிறகு கூறினான்: (21:108) وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ நான் உம்மை உலகில் ரஹ்மத் ஆக்கி அனுப்பியுள்ளோம்.

கூறினார்கள்: அவன் வேதத்தை தந்தான். அது எத்தகைய முழுமையான விளக்கமான வேதம் எனில் அதில் எந்த சந்தேகமும் இல்லை. لَا رَيْبَ فِيْهِ மேலும் فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ அதில் நிலைத்து நிற்கும் போதனைகள் உள்ளன. மற்றவை வெறும் கதைகளாக உள்ளன. நிரந்தரமான உண்மைகள் திருக்குர்ஆனில் மட்டும் தான் உள்ளன. அது اٰيٰتٌ مُّحْكَمٰتٌ ஆகும். கவ்லுன் ஃபஸ்லுன் மீஸான், முஹைமின் ஆகும்.

கூறினார்கள்: சுருக்கமாக முழுமையானதும் முழுமையாக்கப்பட்டதுமான மார்க்கம் முஸ்லிம்களின் மார்க்கமாகும்.

எனவே தான் இறைவன், اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا என்ற முத்திரையைக் குத்தினான். அதாவது இன்று உங்கள் மார்க்கம் உங்களுக்காக முழுமையாகி விட்டது. தனது அருள்களை அல்லாஹ் நிறைவு செய்தான். உங்களுக்காக இஸ்லாதை மார்க்கமாக்குவதை விரும்பினான். இந்த முத்திரை அதில் இடப்பட்டது. அதாவது இன்று உங்கள் மார்க்கம் உங்களுக்காக முழுமையாகி விட்டது. தனது அருள்களை அல்லாஹ் நிறைவு செய்தான். உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக்குவதை விரும்பினான். இந்த முத்திரை அதில் இடப்பட்டது. ஆகவே இஸ்லாம் தான் கடைசியான முழுமையான மார்க்கமாகும். அது எல்லா தேவைகளையும் நிறைவேற்றக் கூடியது.

பிறகு கூறினார்கள்: முஸ்லிம்களின் மீது எத்துணை பரிதாபம்! அவர்கள் எத்தகைய முழுமையான இறை திருப்தியைப் பெறக் காரணமாக இருக்கிற மார்க்கத்தை வைத்துக் கொண்டு வாய்ப்பிழந்தவர்களாக உள்ளனர். அத்தகைய மார்க்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்ட நிலையிலும் பேறிழந்தவராக உள்ளனர். அந்த மார்க்கத்தின் வளங்களில் இருந்தும் பழங்களிலிருந்தும் பங்கெடுப்பதில்லை! மாறாக இறைவன் இந்த வளங்களை உயிருடன் வைப்பதற்காக ஒரு தொடரை ஏற்படுத்தினால் பெரும்பாலார் மறுப்பதற்காகவே எழுந்து நின்றனர். லஸ்த முர்ஸலீன் லஸ்த மூஃமினன் என்ற ஓசையை உயர்த்தினர். அதாவது அவர்களுக்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அனுப்பினான். அவரை ஒப்புக் கொள்வதை விடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத்தின் அருளினால் கிடைத்த அவ்வருளை மறுக்க ஆரம்பித்தனர். நீர் ஒன்றும் இறைவன் புறமிருந்து வந்தவரல்ல என்று முழக்கமிடத் தொடங்கினர். நீர் மூஃமின் அல்லர் என்று வாதம் செய்யத் தொடங்கினர்.

கூறினார்கள்: இறைவன் தூதை தவ்ஹீதை ஒப்புக் கொள்வது கொண்டு மட்டும் பரக்கத்துகளை ஈர்த்திட இயலாது. அந்த ஒப்புக் கொள்தலுடன் மற்ற கடமைகளை அதாவது அஃமாலே சாலிஹாவை செய்வதும் அவசியமாகும். அதுவரை அந்த பரக்கத்துகள் உருவாகாது. தவ்ஹீது உடைய பரக்கத்துகள் கிடைப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களில் மாய்ந்து அவர்களுடைய அழகிய முன்மாதிரியைப் பார்த்து அமல் செய்வது அவசியமாகும்.

கூறினார்கள்: இது உண்மை. தவ்ஹீது நம்பிக்கையின் உயர் தரம் வாய்ந்த ஒரு பகுதியாகும். இதனை ஒரு உண்மையான முஸ்லிமும் இறை உணர்வு கொண்ட மனிதனும் கடைபிடிக்க வேண்டும். ஆனால் தவ்ஹீதை முழுமைப்படுத்த இன்னோர் அம்சம் உண்டு. அது இறை நேசமாகும். அதாவது இறைவனோடு அன்பு கொள்வதாகும். திருக்குர்ஆனின் போதனைகளின் அசல் நோக்கம் இதுதான். இறைவன் எவ்வாறு தனித்தவனும், இணையற்றவனாகவும் இருக்கின்றானோ அதுபோன்று அன்பின் மூலமாகவும் அவனை வஹ்தஹூ லாஷரீகலஹு என்று உறுதி கொள்ள வேண்டும். அனைத்து நபிமார்கள் (அலைஹிஸ்ஸலாம்) உடைய அசல் விருப்பமும் இதுவாகவே இருந்தது. இந்த வகையில் லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய அசல் நோக்கம், ஒருபுறம் தவ்ஹீதாக இருப்பது போன்று அத்துடன் தவ்ஹீதின் மீதுள்ள அன்பை முழுமைப்படுத்துவதும் ஆகும். லாயிலாஹ இல்லல்லாஹ் தவ்ஹீதின் போதனையையும் தருகிறது. தவ்ஹீது மீதுள்ள பிரியத்தை முழுமைப்படுத்துமாறு போதனையும் செய்கிறது.

நான் இப்போது கூறியது போன்று இது எத்தகைய அன்புக்குரிய அர்த்தம் பொதிந்த சொல் எனில் அதனைப் போன்ற ஒரு போதனை முழு தவ்ராத்திலும் இஞ்சீலிலும் இல்லை அல்லது உலகில் வேறந்த வேதமும் அத்தகைய முழுமையான போதனையைத் தரவில்லை. இலாஹ் என்பதன் பொருள் வணக்கத்தக்கவன். எத்தகைய மஃபூதும் மஃஷூகும் (நேசத்திற்குரியவனும்) எனில் அவனுக்கே வணக்கங்கள் உரியன. இஸ்லாத்தில் இந்த அசல் பிரியத்தின் கருத்தை முழுமையாக அச்சொல் தருகிறது. எந்த தவ்ஹீது, பிரியமில்லாமல் இருக்குமோ அது குறையுடையதும் முழுமையற்றும் ஆகும். அல்லாஹ்வுடைய அன்பு கிடைக்கிறது எனில் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமே கிடைக்கிறது என்று முன்னர் கூறப்பட்டது. அல்லாஹ் இவ்வாறு அறிவிப்பு செய்ய வைத்தான். ஃபத்பிவூனி யஹ்பிவுகு முல்லாஹ். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றினால் அதாவது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். என்னைப் பின்பற்றினீர்கள் எனில் இறைவனது அன்பு கிடைக்கும். தவ்ஹீது உடைய உண்மையே ஒரு மூஃமினின் இலக்காக இருக்க வேண்டும்.

இதுபற்றி அன்னார் கூறுகின்றார்கள்: எம்மக்கள் ஒரு ஆட்சியாளர்கள் பக்கம் குனிந்துள்ளார்களோ அவர்கள் அதன் மூலம் வெகுமதிகளையும் பட்டங்களையும் பெறுகின்றனர். அவர்களின் உள்ளத்தில் அவர்களின் மகத்துவம் இறைவனின் மகத்துவம் போன்று உருவாகி விடுகின்றது. இதுபோன்று வேலைகள் மனிதனை தவ்ஹீதின் இலக்கை விட்டு முடித்து விடுகின்றன. மனிதனை அவனது அசல் மையத்திலிருந்து அகற்றி தூர வீசி விடுகிறது. ஆகவே அன்பியா அலைஹிமுஸ்ஸலாம் இந்த போதனையை தருகிறார்கள். காரணிகளுக்கும் தவ்ஹீதுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படவிடக் கூடாது. ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் இருக்க வேண்டும். மனிதன் கடைசியில் தவ்ஹீதையே சார்ந்திருக்க வேண்டும். நபிமார்கள் மனிதர்களுக்கு கற்றுத் தர விரும்புவது எல்லா கண்ணியங்கள், நிம்மதிகள், தேவைகள் அனைத்தும் இறைவனே பொறுப்பாளனாவான். அகவே அவனுக்கு முன்பாக வேறு யாரையும் கொண்டு நிறுத்துவது இரு ஆற்றல்களை ஒன்றுக்கு எதிராக ஒன்றை நிறுத்துவதாகும். இரு ஆற்றல்களை ஒன்றுக்கு எதிரில் ஒன்றை நிறுத்தினால் நிச்சமயாக இரண்டில் ஒன்று அழிந்து விடும். இரு எதிரிகளுக்கு எதிரில் சண்டை வந்தால், இரு பிரிவிற்கிடையில் சண்டை வந்தால், ஒன்று எப்படியாயினும் சாக வேண்டி வரும்.

கூறினார்கள்: எனவே இறைவனது தவ்ஹீது நிலை நிறுத்தப்படுவது முன்னுரிமை பெறத்தக்கது. காரணிகளைப் பயன்படுத்தும் போது அதனை இறைவனாக்கி விடக் கூடாது. காரணிகளைப் பயன்படுத்துவது

அவசியமாகும். எந்தக் காரணிகளை இறைவன் ஆயத்தம் செய்து தந்துள்ளானோ வாய்ப்புகளை தந்துள்ளானோ அதனை பயன்படுத்துங்கள். ஆனால் அதனை இறைவனாக்காதீர்கள். தவ்ஹீதிற்கு முன்னுரிமை கொடுங்கள். இந்த தவ்ஹீது மூலம் இறைவனுடன் ஓர் அன்பு உருவாகிறது. இலாபமும் நஷ்டமும் அவன் கையிலே உள்ளது என்றும், உண்மையான பேருபகாரி அவனே என்றும் ஒவ்வொரு அருளும் அவனிடமே உள்ளது என்றும், இடையில் எதுவும் வர முடியாது என்றும் மனிதன் புரிந்து கொண்டு அந்த தூய நிலையைப் பெற்று விட்டால் அவன் முவஹ்ஹித் என்று அழைக்கப்படுகிறான். (தவ்ஹீதின் மீது உண்மையான நம்பிக்கை கொண்டவர்) இந்நிலை ஏற்பட்டு மனிதன் முழுமையாக இறைவனைச் சார்ந்து விட்டால், நடுவில் எதுவும் இல்லை எனில் அப்போது அவர் முவஹ்ஹித் எனப்படுவார்.

சுருக்கமாக தவ்ஹீதின் ஒருநிலை என்னவென்றால், மனிதன் கற்கள், மனிதர்கள் அல்லது வேறு ஒரு பொருள் இறைவன் ஆக்காமல் இருப்பது இன்னும் சொல்வதாயின், அவற்றை இறைவன் ஆக்குவதில் நிம்மதியின்மையையும் வெறுப்பையும் காட்டுவது ஆகும். இரண்டாவது நிலை, காரணிகளையே சார்ந்து நிற்காமல் இருப்பது. அளவுக்கு அதிகமாக சார்ந்திருக்காமல் இருப்பது ஆகும்.

கூறினார்கள்: மூன்றாவது வகை, தனது நஃப்ஸையே அல்லது சுய நோக்கங்களையோ கூட நடுவிலிருந்து அகற்றி விடுவது, தவ்ஹீதை நிலைநாட்டுவதற்குரிய மூன்றாவது அம்சம் தனது நஃப்ஸை அழித்து விடுவது, அதன் சுய நோக்கங்களை முடித்து விடுவது, அவற்றை மறுத்து விடுவது ஆகும். பல சமயங்களில் அவனது சுய பெருமை, ஆற்றல் அவனது கவனத்தில் இருக்கும். மனிதன் சில பணிகளில் தனது சுய பெருமையை அல்லது ஆற்றலை கவனத்தில் கொள்கிறான். இன்ன நற்செயலை நான் எனது ஆற்றலைக் கொண்டு செய்தேன் என்று நினைக்கிறான். மனிதன் தனது ஆற்றல் மீது எந்த அளவு நம்பிக்கை வைக்கிறான் எனில் ஒவ்வொரு பணியையும் தனது திறமையுடன் தொடர்புபடுத்துகிறான். மனிதன் தனக்கு ஆற்றல் இருக்கிறது என்பதையும் மறுத்து விடும் போதுதான் முவஹ்ஹித் (தவ்ஹீதை உடையவன்) ஆகிறான்.

ஆனால் இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகிறது. மனிதனின் அனுபவத்தின் மூலம் நிரூபணமாவதாவது, மனிதனது ஏதாவது ஒரு பாவத்தின் பங்கை தன்னிடம் வைத்துள்ளான். சிலர் பெரிய பாவத்தால் பீடிக்கப்படுகின்றார்கள். அல்லது சிலர் நடுத்தர வகை பாவத்தாலும், சிலர் நுட்பத்திலும் நுட்பமான பாவத்தாலும் இரையாக்கப்படுகிறார்கள். உதாரணமாக, கருமித்தனம், காட்டுதல் போன்ற பாவங்களால் பீடிக்கப்படுகிறான். இவற்றிலிருந்தும் மனிதன் எதுவரை விடுதலை அடைவதில்லையோ அதுவரை மனிதன் தனது காணாமற்போன ஒளிகளைப் பெற முடியாது. அசல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ் பல கட்டளைகளைத் தந்துள்ளான். அவற்றுள் சில எல்லாருக்கும் செய்ய முடிவதில்லை. உதாரணமாக, ஹஜ் – இது சக்தியுள்ளவருக்கே கடமையாகும். பிறகு வழியில் பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர் பின்னால் விட்டு வந்தவர்களில் வாழ்வாதாரத்திற்கு நல்ல ஏற்பாடு இருக்க வேண்டும். நீங்கள் பசியோடு கிடங்கள். நான் ஹஜ்ஜுக்குப் போய் வருகிறேன் என்பதன்று. இதுபோன்ற நிபந்தனைகள் நிறைவேறும் போது ஹஜ் செய்ய முடியும். அதுபோன்று ஸக்காத் கொடுக்கும் வசதி உள்ளவர் தான் ஸக்காத் கொடுக்க முடியும். அதுபோன்று தொழுகையும் மாறுதல்களுக்குட்பட்டது. பயணத்தில் கஸர் செய்யப்படுகிறது. சில நேரத்தில் சேர்த்து தொழப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு விஷயத்திற்கு மட்டும் தான் எந்த மாறுதலும் இல்லை. மாற்றமும் செய்ய முடியாது. அது லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஆகும். அசல் விஷயம் இதுதான். பிற எல்லாமே அதன் விளக்கங்களே ஆகும். இபாதத் செய்யப்படாமல் தவ்ஹீது முழுமை அடையாது. அல்லாஹ் கட்டளையிட்ட படி இபாதத் செய்யுங்கள். அப்போது தான் தவ்ஹீது முழுமை அடையும்.

கூறினார்கள்: இதன் பொருள் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் கூறுபவர் தனது உறுதிப்பாட்டில் எப்போது உண்மையாளராக இருப்பார் எனில் உண்மையான முறையில் செயல் அளவிலும் கூட அதனை நிரூபித்துக் காட்ட வேண்டும். உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த அன்பிற்குரியவனும், தேடுதலுக்கு உரியவனும் இலக்காக இருப்பவனும் இல்லை. ஒருவரிடம் இந்த நிலை இருந்தால் யதார்த்தத்தில் அவர் செயல் அளவில் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்திக் காட்டுவார் எனில் இறைவனின் சன்னிதானத்தில் அவர் அந்த உறுதிப்பாட்டில் பொய்யானவரல்ல. எல்லா உலகப் பொருட்களும் எரிந்துபோய் விட்டது. அவரது ஈமானில் ஒரு மாய்தல் ஏற்பட்டு விட்டது எனில் அந்நிலையில் அவரது வாயிலிருந்து லாயிலாஹ இல்லல்லாஹ் வெளிப்படுகிறது. அதன் இன்னொரு பகுதியான முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் முன்மாதிரியாக வருகிறது. அந்த முன்மாதிரி மற்றும் முன்னுதாரணம் மூலம் அவருக்கு ஒவ்வொரு காரியமும் எளிதாகி விடுகிறது. உதாரணம் முன்னால் இருக்கும் போது எல்லா காரியங்களும் எளிதாகி விடுகின்றன. அந்த உதாரணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் திருக்குர்ஆனை செயல்படுத்திக் காட்டி முன்னுதாரணத்தை நிலைநாட்டித் தந்துள்ளார்கள்.

கூறினார்கள்: அன்பியா அலைஹிமுஸ்ஸலாம் முன்மாதிரியாக வருகிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா அழகின் முழுமைகளின் தொகுப்பு ஆவார்கள். அழகுகள் எத்தனை உண்டோ அத்தனையும் அவர்களிடம் ஒன்றுகூடி இருந்தன. அதன் முன்மாதிரியையும் அவர்கள் நிலைநாட்டினார்கள். ஏனெனில் எல்லா நபிமார்களின் முன்னுதாரணங்களும் அவர்களிடம் முழுமையாக இருந்தன.

ஒருமுறை ஒரு அவையில் கேள்வி எழும்பியது. யஹுதிகளிடமும் தான் தவ்ஹீது உள்ளது. இஸ்லாம் அதனை விட அதிகமாக வேறு எதனை எடுத்து வைக்கிறது? ஆட்சேபனை செய்பவர் அவ்வாறு ஆட்சேபனையை செய்தார். அன்னார் கூறினார்கள்: யஹுதிகளிடம் தவ்ஹீது இல்லை. ஆம்! தவ்ஹீது என்பதற்கு உட்கரு உண்டு. ஆனால் உட்கரு இல்லாமல் வெளியிலுள்ள தொலி எதற்கும் உதவாது. தவ்ஹீதுக்கு பல படித்தரங்கள் உள்ளன. அவை அனைத்தையும் அறியாமல் தவ்ஹீது பற்றி புரிய முடியாது. வெறும் லாயிலாஹ இல்லல்லாஹ் கூறுவது போதாது ஷய்த்தான் கூட சொல்லி விடுவான். எதுவரை செயலளவில் லாயிலாஹ இல்லல்லாஹ்வின் உண்மை மனிதனின் இருப்பில் உருவாகவில்லையோ அதுவரை எதுவும் நடக்காது. யஹுதிகளிடம் இது எங்கிருக்கிறது? நீங்களே கூறுங்கள். கேட்டவரும் ஒரு யஹுதியாக இருந்தால் தவ்ஹீதின் ஆரம்ப கட்டமே இறைவனது கூற்றிற்கெதிராக மனிதனிடம் எந்த செயலும் வெளிப்படாமல் இருப்பது. எந்த செயலும் இறைவனது பிரியத்திற்கு எதிராக வெளிப்படாமல் இருப்பது. இறைவனது அன்பிற்கும் இறைவனுக்கு கட்டுப்படுவதிலும் மாய்ந்து போய் விடுவது. இதற்காகவே இதன் பொருளாக, அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை. வேறு நேசத்திற்குரியவன் இல்லை. கட்டுப்படத்தகுந்தவனும் இல்லை.

நினைவில் கொள்ளுங்கள். ஷிர்க்கில் பல வகைகள் உள்ளது. அவற்றுள் ஒன்று, பகிரங்கமானது. மற்றது மறைவானது. பகிரங்கமான ஷிர்க்கிற்கு உதாரணம் பொதுவாக வணங்கப்படுகிற சிலைகள், மரங்கள், மற்ற பொருள்கள் வணக்கப்படத் தகுந்தவையாக கருதப்படுபவையாகும். மறைவான ஷிர்க்காவது மனிதன் ஒரு பொருளுக்கு அல்லாஹ்வுக்கு தர வேண்டிய மகத்துவத்தை தருதல், தேவைக்கு அதிகமான கண்ணியமும், அந்தஸ்தும் தரத் தொடங்குவது, அல்லாஹ்வுக்கு செய்வது போன்றோ அல்லது செய்ய வேண்டிய அளவுக்கு பிறருக்கு செய்வது – அல்லது ஒரு பொருளுக்கு அல்லாஹ்வைப் போன்று நேசம் செலுத்துவது அல்லது பயப்படுவது அல்லது அதன் மீது தவக்குல் வைப்பது. இப்போது சிந்தித்துப் பாருங்கள். இந்த உண்மை நிலை முழுமையான முறையில் தவ்ராத்தை ஒப்புக் கொண்டவர்களிடம் உள்ளதா? இல்லையா? ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய வாழ்க்கையிலேயே அவர்களால் நிகழ்ந்தது. பேசுபவரிடம் கூறினார்கள். உங்களுக்கே தெரிந்திருக்கும். தவ்ராத் மட்டுமே போதுமானதாக இருந்தால் யஹுதிகள் தம் நஃப்ஸுகளை தூய்மைப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவர்களிடம் தூய்மை உருவாகவில்லை. மாறாக மிகவும் கடின உள்ளம் படைத்தவர்களாகவும் தீயவர்களாகவும் ஆகிக் கொண்டே செல்கின்றனர். ஹஸ்ரத் மூஸாவுக்கும் கூட எதிர்பேச்சுப் பேசினர். திருக்குர்ஆனின் தாக்கங்கள் எத்தகையவையென்றால் மனிதனின் உள்ளத்தில் வெளிப்படையான வடிவத்திலோ பொருள் அளவிலோ சுய நோக்கங்கள் இல்லாமல் இருப்பின் அவை சிறப்பான விளைவை உருவாக்குகின்றன. அதன் முன்னுதாரணம் ஒவ்வொரு காலத்திலும் உள்ளன. இந்த வகையில் இப்போதும் உள்ளது.

***திருக்குர்ஆன் கூறுகிறது:***

(3.32) قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ

ரஸூலே இவர்களிடம் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்விடம் அன்பு வைக்கிறீர்கள் எனில், என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அன்பு செலுத்துவான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவது மனிதனை இறை நேசம் பெற்றவன் என்ற ஸ்தானத்திற்கு இட்டுச் சென்று விடுகிறது. அதிலிருந்து தெரிய வருகிறது அன்னார் முழுமையான முவஹ்ஹித் (ஏகத்துவமுடையவர்) களின் முன்மாதிரி ஆவார். பிறகு யஹுதி தவ்ஹீதை ஒப்புக் கொண்டவர் எனில் அத்தகைய முவஹ்ஹிதை விட்டு தூர விலகி இருக்க வேண்டிய அவசியமில்லை. நினைவில் கொள்ள வேண்டிய விஷயமாக இது இருந்தது. அதாவது அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஈமான் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். காத்தமுர் ரஸூலை மறுப்பதும், அகம்பாவமும் மிகவும் ஆபத்தானது. ஆனால் அவர்கள் அதனை பொருட்படுத்தவில்லை. அவர்களுடைய வேதத்திலேயே அன்னாரைப் பற்றிய முன்னறிவிப்புகள் இருந்த போதிலும் அவர்கள் மறுப்பதற்கு கஸது குலூபஹும் – அவர்களது உள்ளங்கள் கடினமாகி விட்டன என்பதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

ஒரு சமயத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) பற்றிய தவறான கொள்கைகளைப் பற்றி வெளியிட்டவாறு கூறினார்கள்: இஸ்லாம் ஒரு தூய்மைக்கப்பட்ட மாசற்ற தவ்ஹீதை கொண்டு வந்தது. அதன் முன்னுதாரணத்தின் பெயரையும் அடையாளத்தையும் கூட மற்ற மார்க்கங்களில் பெற முடியாது. எனது ஈமானாவது முந்தைய வேதங்களிலும் கூட இறைவனின் தவ்ஹீது அறியக் கிடைத்தது. எல்லா நபிமார்களின் தோற்றத்தின் நோக்கமும் விருப்பமே தவ்ஹீதை பரப்புவதாகவே இருந்தது. ஆனால் எந்த நடைமுறை மற்றும் செயல்முறைப்படி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) தவ்ஹீதை எடுத்துக் கொண்டு வந்தார்களோ – எந்த முறையில் திருக்குர்ஆன் தவ்ஹீதை எடுத்து வைக்கிறதோ அதனை வேறு எந்த நூலிலும் அறிய முடியவில்லை. அத்தகைய தூய நீரூற்றை இந்த மக்கள் மாசுபடுத்திட நினைத்தனர்.

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்த்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணத்தை ஏற்காமல் இறைவனுக்கு எதிராக அவரைக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். பிறகும் கூட தம்மை முஸ்லிம் என்று கூறுகிறார்கள். அவர்களைப் பற்றி கூறுகிறார்கள்: அத்தகைய தூய நீரூற்றை அவர்கள் அதாவது முஸ்லிம் என்று கூறப்படுபவர் நிறுத்திவிட நினைக்கின்றனர். பிறகு இஸ்லாத்தை இழிவுபடுத்த வேறு என்னதான் எஞ்சியிருக்கிறது? கூறுங்கள். இதில் அவர்களது துரதிஷ்டமாவது அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அசல் இஸ்லாத்தை எடுத்துக் கூறப்பட்டால் திருக்குர்ஆன் மூலம் நிரூபித்துக் காட்டப்பட்டால் நீங்கள் தவறில் இருக்கிறீர்கள் என்று காட்டப்பட்டால், எமது மூதாதையர்கள் இப்படித்தான் நம்பி வந்தார்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் நான் கூறுகிறேன். இதனை மட்டும் சொல்லி விட்டு நீங்கள் (உங்களை) குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியுமா? முடியாது. திருக்குர்ஆனுக்கும் இறைவனது புராதன நடைமுறைக்கேற்ப இந்த கூற்று மூலம் ஒரு சான்று முழுமை பெறுகிறது. எப்போதாவது இறைவனால் நியமிக்கப்படுபவர், அனுப்பப்படுபவர் வந்தால் எதிரிகள் அவரது போதனையைக் கேட்டு இதனையே தான் கூறினார். مَّا سَمِعْنَا بِهٰذَا فِيْٓ اٰبَآئِنَا الْاَوَّلِيْنَ நாங்கள் மூதாதையர்களிடம் இத்தகைய சம்பவம் நடந்ததைப் பார்க்கவுமில்லை; கேட்கவுமில்லை.

***ஏகத்துவம் மற்றும் காரணிகளை இணையாக்குவது பற்றி கூறுகின்றார்கள்:***

தவ்ஹீது என்பது வெறும் நாவளவில் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் கூறி விடுவதன்று. மாறாக தவ்ஹீது என்பதன் பொருள் இறை மகத்துவம் நன்றாக உள்ளத்தில் பதிவதற்குப் பெயராகும். அவனுக்கு முன் வேறெந்த பொருளின் மகத்துவமும் உள்ளத்தில் இடம்பிடிக்காமல் இருப்பது, ஒவ்வொரு செயல் அசைவு, அமைதிகளும் தூய இருப்பாகிய அல்லாஹ்விடமே திரும்புகிறது என்று விளங்குவது, ஒவ்வொரு செயலிலும் அவன் மீதே நம்பிக்கை வைப்பது, எந்த அல்லாஹ் அல்லாதவற்றின் மீதும் எந்தப் பார்வையும் தவக்குலும் ஒருபோதும் இல்லாமல் இருப்பது, இறைவனது சுயம் மற்றும் பண்புகளில் எந்தவகையான ஷிர்க்கும் வைக்காமல் இருப்பது. இப்போது படைப்பினங்களை வணங்குவதன் உண்மை நிலை வெளிப்பட்டு விட்டது. மக்கள் அதிலிருந்து விலகியதை வெளிப்படுத்துகின்றனர். அதாவது கிறித்தவர்கள் ஈஸாவை இறைவன் என்று நம்பியிருந்தனர். அதை விட்டு விலகத் தொடங்கி விட்டனர். எனவே தான் ஐரோப்பாவின் பல நகரங்களின் கிறித்தவர்கள் தினமும் வெறுத்துக் கொண்டு வருகின்றனர். தினசரி நாளிதல்களிலும் வெளியீடுகளிலும் வெளியிடப்படுகின்ற செய்திகள் அதனை உண்மைப்படுத்துகின்றன. இந்த நிலை இப்போது ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமாகி விட்டது. பெயருக்கு கிறித்தவர்களாக பலர் இருக்கின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற கொள்கையை அவர்கள் ஏற்பதும் இல்லை. இன்னும் சொல்வதாயின், இதன் காரணமாகவே இறை இருப்பையே மறுத்து விட்டனர்.

சுருக்கமாக படைப்பினங்களை வணங்குவதை எவரும் ஏற்கமாட்டார். ஆம் காரணிகளை வணங்கும் ஷிர்க்கை பலர் அறியவில்லை. அந்த வகையான ஷிர்க் ஆகும். உதாரணமாக ஒரு விவசாயி நான் உழாவிட்டால் பழம் கிடைக்காது. அதனால் நாம் வாழவும் முடியாது என்கிறார். அதுபோன்று ஒவ்வொரு தொழில் செய்வோரும் தமது தொழிலின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். நாம் இதனை செய்யா விட்டால் வாழ்வது சாத்தியமற்றது என்று புரிந்து வைத்துள்ளார்கள். அதன் பெயர் காரணி வணக்கமாகும். காரணம் அவர்களுக்கு இறைவனது வல்லமைகளின் மீது நம்பிக்கை இல்லை. தொழில்கள் என்பது ஒருபக்கம் இருக்கட்டும். தண்ணீர், காற்று, உணவு போன்ற வாழ்வின் அடிப்படை பொருள்கள் கூட மனிதனுக்கு இறைவனது அனுமதியின்றி பயன் தர முடியாது. எனவேதான் மனிதன் தண்ணீர் குடிக்கும் போது இறைவன் இந்த தண்ணீரை உருவாக்கினான். இந்த தண்ணீர் இறைவனது விருப்பம் இல்லா விட்டால் பயன்தர முடியாது என்று கருத வேண்டும். இறை விருப்பத்தினால் தான் தண்ணீர் பயன் தருகிறது. இறைவன் விரும்பினால் அதே தண்ணீர் நஷ்டம் ஏற்படுத்தி விடும்.

கூறினார்கள்: ஒருமுறை ஒரு மனிதர் நோன்பு வைத்திருந்தார். நோன்பு திறக்கும்போது தண்ணீர் குடித்தார். படுத்து விட்டார். அத்தண்ணீர் அவரிடம் விஷத்தின் வேலையைச் செய்து விட்டது. தண்ணீர் குடித்தவாறு சிறு கஷ்டம் ஏற்பட்டது. எழுந்திருக்கவே முடியாமல் போய் விட்டது. வாழ்வளிக்கும் பொருளாகிய தண்ணீர் அங்கு அவருக்கு விஷமாகி விட்டது. சிலர் நோன்பு திறக்கும் போது அளவில்லாமல் தண்ணீர் குடித்து விடுகின்றனர். அது நஷ்டமிழைத்து விடுகிறது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிறகு கூறினார்கள்: ஒரு வேலை சமுதாய வேலையாகவோ அல்லது வேறு எதுவாக இருப்பினும் வானத்திலிருந்து பரக்கத் வழங்கப்படாவிட்டால் அது அருளுக்குரியதாக இருக்கவே செய்யாது. சுருக்கமாக இறைவனது பணிகளைப் பற்றி முழுமையான உறுதி வேண்டும். அந்த ஈமான் இல்லையெனில் அதில் நாத்திகத்தின் ஒரு அம்சம் உள்ளது. ஒரு வேலை முதலில் வானத்தில் நடந்தால் தான் பூமியில் நடக்கிறது.

கூறினார்கள்: வெறும் அறிவிப்பின் பெயர் தவ்ஹீது அல்ல. மவ்லவிகளைப் பாருங்கள். மற்றவருக்கு போதனை செய்கின்றனர். தாம் சிறிதும் அமல் செய்வதில்லை. எனவே தான் அவர்கள் மீது எந்த நம்பிக்கையும் இருப்பதில்லை. ஒரு மவ்லவி பற்றி வருகிறது. அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டிருந்தவர்களுள் அவரது மனைவியும் இருந்தார். ஸதகா கைராத் மற்றும் மக்ஃபிரத் பற்றி அவரது பேச்சு இருந்தது. அதன் தாக்கத்திற்குள்ளாகி ஒரு பெண் தனது காலிலிருந்து ஒரு கொலுசைக் கழற்றி சொற்பொழிவாளரிடம் தந்தார். சொற்பொழிவாற்றுபவர் கேட்டார். உனது இரண்டாவது கால் நரகத்திற்குப் போக வேண்டும் என்று விரும்புகிறாயா? அதனைக் கேட்டு அவள் இரண்டாவதையும் தந்து விட்டாள். வீட்டிற்கு வந்ததும் மனைவியும் கூட அந்த சொற்பொழிவை நடைமுறைப்படுத்த விரும்பினாள். தேவையுள்ளவருக்கு சிறிது கொடுக்க விரும்பினாள். மவ்லவி சாஹிப், அதெல்லாம் சொல்வதற்குரிய விஷயங்கள் தான்; செய்வதற்கல்ல என்று கூறினார். நாம் அவ்வாறு கூறாவிட்டால் நமது வாழ்வைக் கழிக்க முடியாது. இதுவே இக்கால மவ்லவிகளின் நிலையாகும். இத்தகையோரைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. சொற்பொழிவாளர்கள் பிரச்சார மேடையில் ஒன்று பேசுகின்றனர். தனிமையல் அதற்கு மாற்றமாக செயல்படுகின்றனர்.

ஓர் உண்மையான மூஃமின் தவ்ஹீதின் மீது நிலைநிற்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கியவாறு ஒரு சமயத்தில் கூறினார்கள்:

மூஃமின் என்பவர் ஒரு வகையில் பொருட்படுத்தாதவர் ஆவார். இறைவனது திருப்தியின் தேவை மட்டுமே அவருக்கு இருக்கும். அவனுக்கு கீழ்படிவதையே எப்போதும் கவனத்தில் கொள்கிறார். அவனது விவகாரங்கள் இறைவனிடம் இருக்கும் போது பிறரிடமிருந்து துன்பம் இலாபம் பற்றி என்ன பயம்? மனிதன் இறைவனுக்கு எதிரில் ஏதாவது ஒன்றை நுழைக்கிறார் எனில் காட்டுதல் மற்றும் தன்னையே ஏமாற்றுதல் போன்ற பாவங்களால் பீடிக்கப்படுகிறார். நினைவில் கொள்ளுங்கள். இந்த தலையீடுகள் ஒரு விஷமாகும். கலிமா லாயிலாஹ இல்லல்லாஹ்வின் முதற்பகுதி லாயிலாஹவில் இதுதான் மறுக்கப்பட்டுள்ளது.

கூறுகிறார்கள்: மனிதன் இறைவனது ஒரு கட்டளையை நிறைவேற்றுவதில் குறை வைத்தான் எனில், அவர் ஒரு இறைப் பண்பில் தன்னை இணை வைத்ததனால் குறை வைத்தார். அல்லாஹ்வின் ஒரு கட்டளையை அவர் நிறைவேற்றாமல் விட்டு விட்டார் எனில் அதன் பொருள் அல்லாஹ்வின் அந்தப் பண்பில் ஒருவரை ஷிர்க் ஆக்கியுள்ளார். அதனால் தான் அதனை அவர் செய்யவில்லை.

கூறுகிறார்கள்: எனவே தான் லாயிலாஹ கூறும் போது மனிதன் இதுபோன்ற வணங்கப்படுபவைகளை மறுக்கின்றான். அதாவது எந்தப் பண்பிலும் அல்லாஹ்வுக்கு இணையாக எதையும் கொண்டு வருவதில்லை. இதுவே லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய நிலையாகும்.

கூறினார்கள்: சில நூல்களில் கூறப்பட்ட சில சம்பவங்களைக் குறிப்பிட்டவாறு நோன்பாளி பற்றி எழுதியுள்ளார்கள். ஒரு நோன்பாளியான மவ்லவி ஒருவரிடம் செல்கிறார். தனது நோன்பை அவரிடம் வெளிப்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. வீட்டுக்காரர் அவரை சாப்பிடக் கூப்பிடும் போது நான் நோன்பு வைத்திருக்கிறேன் என்று கூறாமல் தான் நஃப்ஸின் மீது கடுமை காட்டுபவன் என்று நிரூபிப்பதற்காக எனக்கு அங்கு இருக்கிறது என்று கூறினார்.

கூறினார்கள்: சுருக்கமாக பல மறைவான பாவங்கள் உள்ளன. தெளிவாக நான் நோன்பு வைத்திருப்பதாக கூறவில்லை. நான் உண்பதும் குடிப்பதும் இல்லை என்பது போன்று பாவனை காட்டினார்.

கூறினார்கள்: சுருக்கமாக இதுபோன்று பல மறைவான பாவங்கள் உள்ளன. இவை அமலை அழித்து விடுகின்றன. இவ்வாறு செயற்கையாக போலித்தனமாக தமது ஒரு நற்செயலை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

இது மறைவான பாவமாகும். இதனால் சிறிது சிறிதாக அமல்கள் அழிந்து விடுகின்றன. மனிதன் தவ்ஹீதிலிருந்து விலகி விடுகின்றான்.

கூறினார்கள்: செல்வந்தர்களுக்கு தற்பெருமை இருக்கிறது. அது அவர்களின் அமல்களை தின்று கொண்டிருக்கிறது. எனவே இத்தகைய சிந்தனைகள் இல்லாத ஏழை மனிதர்கள் முந்தி விடுகின்றனர். ஏனெனில் பெருமை அகம்பாவம் ஆகியவை மனிதனை தவ்ஹீதை விட்டு தூர விலக்கி விடுகிறது.

கூறினார்கள்: காட்டுதல் போன்றவற்றின் உதாரணம் எலியைப் போன்றது. அது உள்ளுக்குள்ளேயே மனிதனின் அமல்களை தின்று கொண்டிருக்கிறது. இறைவன் பெரும் கரீம் ஆவான். ஆனால் அவன் பக்கம் வருவதற்கு பணிவு அவசியமாகும். பணிவு இருந்தால் அல்லாஹ்வுக்கு அருகில் வருவீர்கள். எந்த அளவுக்கு அகம்பாவமும் பெருமையும் உள்ளே இருக்குமோ அது இல்ம் அடிப்படையில் இருந்தாலும் அது அதிகாரம் அடிப்படையிலோ அல்லது பொருள் அடிப்படையில் அல்லது குடும்பப் பாரம்பரியம், வாரிசுகள் அடிப்படையில் இருந்தாலும் அந்த அளவுக்கு பின்னடைவைப் பெறுவார். எனவே சில நூல்களில் எழுதப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தினருள் அவ்லியாக்கள் குறைவாக வந்துள்ளனர். அவர்களிடம் குடும்பப் பாரம்பரிய பெருமை வந்து விடுகிறது. முதல் நூற்றாண்டுக்குப் பிறகு இந்த சிந்தனை உருவானது. இந்த மக்கள் பின்தங்கி விட்டனர்.

கூறினார்கள்: இந்த வகையான திரைகள் மக்களை வாய்ப்பிழந்தவர்களாகவும் விலக்கப்பட்டவர்களாகவும் ஆக்கி விடுகிறது. மிகக் குறைந்தவர்களே இதிலிருந்து ஈடேற்றம் பெறுகின்றனர். செல்வந்தவர்களிடமும் இத்தகைய திரை காணப்படுகிறது. இதே விஷயங்கள் தான் இறை கட்டளைகளை நிறைவேற்றுவதை விட்டும் பணக்காரர்கள் மற்றும் செல்வந்தர்களைத் தடுக்கிறது. கட்டளைகளின்படி அமல் செய்யாவிட்டால் மனிதன் தவ்ஹீதை விட்டு விலகி விடுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இல்ஹாம் அன்த மின்னி வஅனா மின்க அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது. இது தவ்ஹீதுக்கு மாற்றமாக இருக்கிறதே என்று மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். நீ என்னிடமிருந்துள்ளாய். நான் உன்னிடமிருந்துள்ளேன் என்பதை மக்கள் ஆட்சேபிக்கின்றார்கள்.

கூறினார்கள்: அன்த மின்னி என்பது முற்றிலும் தெளிவானது. இதில் எந்த ஆட்சேபனையும் குறையும் சொல்ல இயலாது. எனது தோற்றம் அல்லாஹ்வின் அருளால் மட்டுமே உண்டானது என்பதாகும். அன்த மின்னி என்பதன் பொருள் எதெல்லாம் எனக்கு கிடைத்ததோ அனைத்தும் இறைவனது அருளால் கிடைத்ததாகும். அல்லாஹ்வே தந்தான். நினைவில் கொள்ள வேண்டும். அசல் விஷயமாவது, அல்லாஹ் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளான். வஹ்தஹூ லாஷரீக் ஆவான். அவனது சுயமில் எந்த இணையும் இல்லை. அவனது பண்பிலும் எந்த இணையும் இல்லை. அவனது செயலிலும் அவனுக்கு இணையில்லை. உண்மையான விஷயமாவது அல்லாஹ் உடைய தவ்ஹீதில் முழுமையான ஈமான், மனிதன் அனைத்து விதமான ஷிர்க்கிலிருந்தும் தூய்மை ஆகாமல் ஏற்படவே முடியாது. அல்லாஹ்வின் சுயம் மற்றும் பண்புகளின் அசலும், இணையில்லாதவனும் ஆவான் என்று நம்பும் போது தவ்ஹீது முழுமை அடைகிறது. அல்லாஹ்வின் சுயம் மற்றும் பண்புகளி அடிப்படையில் இதனை உணர வேண்டும். அனைத்தும் அவனைச் சார்ந்துள்ளன. அவனது சுயமும் பண்பும் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. செயல்கள் மற்றும் அதன் விளைவுகள் இரண்டையும் இறைவனே உருவாக்க முடியும். வேறு எவரும் உருவாக்க முடியாது.

கூறினார்கள்: அறிவற்றவர்கள் எனது இந்த இல்ஹாம் மீது ஆட்சேபனை செய்கின்றனர். இதன் தத்துவத்தை அவர்கள் புரிவதில்லை. தமது நாவால் இறைவனை ஒப்புக்கொண்ட நிலையிலும் கூட அல்லாஹ் உடைய பண்புகளை அடுத்தவருக்காக பொருத்துகின்றனர். உதாரணமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) முஹ்யி மற்றும் முமீத்து என்று நம்புகின்றனர். அதாவது உயிரளிப்பவர், மரணிக்க வைப்பவர் என்று நம்புகின்றனர். மறைவானவற்றை அறிபவர் என்று நம்புகின்றனர். அல் ஹய்யுல் கய்யூம் என்று நம்புகிறார்கள். இது ஷிர்கா? இல்லையா? இது ஆபத்தான ஷிர்க் ஆகும். இதுவே கிறித்தவ சமுதாயத்தை அழித்தது. இப்போது முஸ்லிம்கள் தமது பேறின்மையால் அவர்களின் அதுபோன்ற கொள்கைகளைத் தம்மிடம் சேர்த்து விட்டனர். ஆக, இந்த வகையான பண்புகள் அல்லாஹ்வுக்கு உரியவையாகும். அதனை ஒரு மனிதருக்கு அவர்கள் நபியாகவே இருந்தாலும் வலியாக இருந்தாலும் அவருக்கு பொருத்தக் கூடாது. இவ்வாறு இறைவனது செயல்களின் மீதும் வேறு ஒருவரை இணையாக்க முடியாது. உலகிலுள்ள காரணிகளுள் சிலர் எந்த அளவுக்கு அவற்றை கடவுளாக்குகின்றனர் எனில் அல்லாஹ்வையே மறந்து விட்டவர்களைப் போன்று ஆகிவிட்டனர். தவ்ஹீதின் அசல் நிலையாவது காரணிகளை இணையாக்குவதன் ஐயம் கூட எஞ்சியிருக்கக் கூடாது. பொருள்களைப் பற்றியும் அதன் சிறப்புத் தன்மைகளைப் பற்றியும் அவையெல்லாம் அதற்கு இயல்பாக அமைந்தவை என்று கருதக்கூடாது. மாறாக அப்பொருள்களின் சிறப்புத்தன்மைகளை அல்லாஹ்வே

அவற்றுள் வைத்துள்ளான். உதாரணமாக, துர்பத். இது செடியாகும். மலச்சிக்கலை அகற்றுகிறது. அதுபோன்று முல்ஃபார் இது விஷமாகும். கொன்று விடுகிறது. இந்த சக்தியும் சிறப்புத்தன்மையும் அவற்றிடம் தன்னாலேயே வந்து விடவில்லை. மாறாக இறைவன் தான் அவற்றில் அதனை வைத்துள்ளான். அதை அவன் அகற்றி விட்டால் துர்பத் நோய் நிவாரணி ஆகவும் முடியாது. சன்கியா தன்னுள் அழிக்கும் சக்தியைக் கொண்டிருக்க முடியாது. அதாவது அதை தின்று ஒருவரால் மரணிக்க முடியாது. காரணிகளை அதன் அளவுக்கு அதிகமாக மதிப்பிட வேண்டாம். பண்புகள் மற்றும் இறை செயல்களில் எதனையும் இணையாக்கக் கூடாது. உண்மையான தவ்ஹீது உடையவரே முவஹ்ஹித் எனப்படுவார். பண்புகள்மற்றும் இறை செயல்களை வேறு ஒருவருக்கு பொருத்தினால் அவர் வாயினால் என்னதான் தவ்ஹீதை ஒப்புக் கொண்டதாக கூறினாலும் அவர் முவாஹித் என்று அழைக்கப்பட முடியாது.

நாவினால் ஒரேயொரு இறைவனையே ஏற்றிருப்பதாகக் கூறக்கூடிய முவாஹித் ஆரியர்களிலும் கூட உண்டு. ஆனால் அதனை ஒப்புக் கொண்ட பிறகும் ரூஹ் மற்றும் மூலப்பொருள்களை இறைவன் படைக்கவில்லை என்று கூறுகின்றனர். தத்தமது நிலையில் அம்மூலப் பொருள்களும் ருஹ்களும் அவற்றின் இருப்பு மற்றும் நிலைப்பு ஆகியவற்றில் இறைவனது தேவை உடையவர்கள் அல்லர் என்று நம்புகின்றனர். இதனை விட பெரிய ஷிர்க் வேறெது இருக்க முடியும்? இதனைப் போன்று பலர் ஷிர்க் மற்றும் தவ்ஹீதில் வித்தியாசம் தெரியவில்லை. அவர்களிடம் எத்தகைய அமல்கள், செயல்கள் வெளிப்படுகின்றன அல்லது அவர்களிடம் ஒருவகை கொள்கைகள் உள்ளன. அவற்றில் தெளிவாக ஷிர்க் உள்ளது. உதாரணமாக அவர்கள், இன்ன ஆள் மட்டும் இல்லை என்றால் நான் அழிந்து போயிருப்பேன் அல்லது இன்ன ஆள் இல்லா விட்டால் இது சரியாகி இருக்காது என்று கூறுகின்றனர். ஆக மனிதன் காரணிகளை அளவுக்கு மீறி பெரிதாக்க வேண்டாம். பண்புகள் மற்றும் இறைவனது செயல்களில் வேறு எதனையும் இணையாக்காதீர்கள்.

கூறினார்கள்: மனிதனிடம் ஆற்றல்களை அல்லாஹ் வைத்துள்ளான். அதனை ஓரளவுக்கு மேல் பயன்படுத்த முடியாது. உதாரணமாக கண்ணை பார்ப்பதற்காகப் படைத்துள்ளான். காதை கேட்பதற்காகப் படைத்துள்ளான். நாவை பேசவும் சுவை அறியவும் படைத்துள்ளான். காதுகளிடமிருந்து கேட்கும் பணிக்குப் பதில் பார்ப்பதற்குரிய பணியை எடுத்ததாகவும் நாவுகளிடமிருந்து பேசவும், சுவைக்கவும் செய்வதற்குப் பதிலாக கேட்கும் வேலையை வாங்குவதாகவும் எவரும் கூற முடியாது. அந்த உறுப்புகளின் செயல்களும் சிறப்புத் தன்மைகளும் எல்லைக்குட்பட்டவை. ஆனால் அல்லாஹ்வின் பண்புகளும் செயல்களும் எல்லைக்குட்பட்டவை அல்ல. அவன் லய்ஸ கமஸிலிஹி ஷய்வுன் ஆவான்.

சுருக்கமாக, இந்த தவ்ஹீது எப்போது முழுமை அடையும் எனில் அல்லாஹ்வை எல்லா வகையிலும் தனித்தவனாகவும் இணையற்றவனாகவும் உறுதி கொள்ள வேண்டும். பிற அனைத்தும் வீணானவையே என்று புரிய வேண்டும். மேலும் தானோ தனது காரணிகளோ ஒன்றும் ஒரு பொருட்டல்ல என்று உணர வேண்டும். மேலும் வஅனா மின்க பற்றி கூறுகிறார்கள். அவனது உண்மை நிலையை அறிவதற்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் முழுமையான தன்னை இழந்து விடுவதில் முழுமையை எய்திய பிறகு ஒரு புதிய தூய வாழ்வை பெற்று விட்டார். அந்நிலையில் அம்மனிதனைப் பார்த்து இறைவன் கூறினான். அன்தமின்னி அவனது நெருக்கம் மற்றும் இறை ஞானத்தை அவர் பெற்றுள்ளார் என்பதற்கு ஆதாரமாகும். அம்மனிதர் இறைவனது தவ்ஹீது அவனது மகத்துவம், கண்ணியம் மற்றும் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணமாக இருப்பார் எனில், அவர் இறைவனது இருப்பிற்கு உயிருள்ள ஆதாரமாவார். இந்நிலையில் அவரிடம் இறைவனது தோற்றம் வெளிப்படுகிறது. அவர் முற்றிலுமாக இறைவனிடம் மூழ்கி பிடுகிறார். பிறகு இறைவன் அவரிடமிருந்து வெளிப்படுகிறான். இறைவனது வெளிப்பாட்டின் ஒரு கண்ணாடியாகி விடுகிறார். இந்நிலையில் அவரது இருப்பு இறைவன் தோற்றமளிக்கும் கண்ணாடி ஆகிறது. அத்தகையவருக்காக இறைவன் கூறுகிறான்: வஅனா மின்க. அனா மின்க –வின் குரலைப் பெற்ற மனிதர் உலகிற்கு வரும் போது உலகில் இறை வணக்கத்தின் பெயரும் அடையாளமும் உலகை விட்டு மறைந்து போயிருக்கும். அனா மின்க உடைய குரல் எப்போது வருகிறது எனில் மக்கள் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதை விட்டு தூர விலகிச் சென்றிருப்பர். அதன் பெயரும் அடையாளமும் கூட அழிந்து போயிருக்கும். அந்நிலையில் உலகில் குழப்பமும் தீமையும் அதிகரித்து விடுகிறது.

கூறினார்கள்: உலகில் குழப்பமும் தீமையும் அதிகரித்து விட்டது. உலகிலிருநது இறை உணர்வு தென்படவில்லை. இந்நிலையில் அல்லாஹ் இந்த இயக்கத்தை ஏற்படுத்தினான். அவன் தனது அருளாலும் சிறப்பாலும் மட்டுமே என்னை தோற்றுவித்தான். நான் அம்மக்களை அல்லாஹ்வை விட்டும் கவனமற்றவராகவும் அறியாதவராகவும் இருக்கிற மக்களுக்கு தகவல் தெரிவிப்பதற்காக அனுப்பினான். தகவல் தெரிவிப்பது மட்டுமின்றி உண்மை மற்றும் பற்றுடன் இங்கு வாருங்கள். நான் உங்களுக்கு இறைவனை காட்டித் தருகிறேன் என்று கூறுவதற்காகவும்

இறைவன் என்னை விளித்துக் கூறினான்: அந்த மின்னி வஅனா மின்க. கூறுகிறார்கள்: தவ்ஹீதின் ஒருவகை இவ்வாறாகும். இறை நேசத்திலிருந்து தனது நஃப்ஸையும், நோக்கங்களையும் கூட இடையிலிருந்து அகற்றி விடுதல். தனது இருப்பை அவனது கண்ணியத்தில் மாய்த்து விடுதல்.

சஹாபாக்களின் தூய மாசற்ற நிலையை விளக்கியவாறு கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் நிலைமையைப் பார்த்து ஆச்சர்யம் ஏற்படுகிறது. அவர்கள் சூட்டையும் பார்க்கவில்லை. குளிரையும் பார்க்கவில்லை. தமது வாழ்வை அழித்து விட்டார்கள். தமது கண்ணியத்தையும் பொருட்படுத்தவில்லை. உயிரையும் பொருட்படுத்தவில்லை. ஆடு மாடுகளைப் போன்று பலியிடப்பட்டார்கள். இதுபோன்ற உதாரணம் காட்டுவது எளிதல்ல. இந்த ஜமாஅத்தின் மாசற்றத் தன்மைக்கு இதனை விட வேறு என்ன நிரூபணம் வேண்டும்? உயிரைக் கொடுத்து தமது மாசற்ற நிலையை நிரூபித்தனர். அவர்களின் நஃப்ஸ் முற்றிலுமாக உலகை விட்டு வெறுமையாகி இருந்தது. ஒருவர் வாகனத்தில் பயணத்திற்காக தயாராக நிற்பது போன்று இம்மக்கள் உலகை விட்டு விட்டு ஆகிரத்திற்காக தயாராக இருந்தனர். மக்களின் பெரும்பாலான கவலையின் பங்கு உலகிற்காகவே இருந்தது. அது செய்ய வேண்டுமே இது செய்ய வேண்டுமே என்ற கவலையே இருக்கிறது. இந்நிலையில் அவர்களின் செல்ல வேண்டிய நேரம் வந்து விடுகிறது. இறைவன் எவரையும் வீணாக்குவதில்லை. நமது பொருள் அழிந்து விடும் என்ற ஆட்சேபனை தவறாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அபூபக்கர் உடைய பொருள் எவ்வளவு இருந்தது? 100, 200 ரூபாய்கள். அவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைத்த கூலி என்ன? அரசராக்கி விட்டான். மேலும் கெய்ஸர் கிஸ்ராவுக்கு வாரிசாக்கி விட்டான். சிறிது இறைவனுக்காகவும் சிறிது ஷய்த்தானுக்காகவும் மனிதன் வாழ்வதை இறைவனது தன்மானம் விரும்புவதில்லை. தவ்ஹீதின் உண்மை நிலையும் இதுதான். இறைவன் அல்லாத ஒன்றின் பங்கே மனிதனிடம் இருக்கக் கூடாது. தவ்ஹீதை ஏற்பது ஒரு மரணமாகும். அசலில் அந்த மரணம் தான் வாழ்வாகும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

நிச்சயமாக அறிக. இந்த உலகிற்குப் பிறகு ஓர் உலகம் உண்டு. அது ஒருபோதும் முடியாது. எனவே நீங்கள் உங்களை தயார் செய்ய வேண்டும். உலகமும் அதன் இரசணையும் இங்கு முடிந்து விடும். ஆனால் அந்த நிஃமத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. நான் உண்மையாகக் கூறுகிறேன். ஒரு மனிதர் இந்த அனைத்தையும் விட்டு தனித்து இறைவன் பக்கம் வந்தார் எனில் அவரே மூஃமின் ஆவார். ஒரு மனிதர் இறைவனுக்காக ஆகி விட்டால் பிறகு அவரை இறைவன் விட்டு விடுவது என்பது ஒருபோதும் நடக்காது. இறைவன் அநீதியிழைப்பவன் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். எந்த மனிதர் இறைவனுக்காக ஒன்றை இழந்தாரோ அவர் பன்மடங்கு அதிகமாகப் பெறுகிறார். நீங்கள் இறைவனது திருப்திக்கு முன்னுரிமை தந்தால் சந்ததிகளை விரும்பினால் கண்டிப்பாக சந்ததி கிடைக்கும் என்று அறியுங்கள். உங்களுக்கு பொருள் தேவைப்பட்டால் கண்டிப்பாக தருவான். நீங்கள் இரு முயற்சி செய்யாதீர்கள். ஒரே நேரத்தில் இரு முயற்சிகள் நடக்க முடியாது. முயற்சி ஒன்றிற்காகத்தான் செய்ய வேண்டும். அது இறைவனை பெறுவதற்கான முயற்சியாக இருக்க வேண்டும். இறைவனுக்காக உலகை விட்டவர்களுக்காக உலகம் கிடைத்து விடும். ஆனால் நிபந்தனை எல்லா வகை ஷிர்க்கிலிருந்தும் தப்புங்கள்.

கூறினார்கள்: நான் மீண்டும் கூறுகிறேன். இஸ்லாத்தின் அசல் வேர் தவ்ஹீது ஆகும். அதாவது இறைவனைத் தவிர வேறெதுவும் மனிதனுக்குள் இருக்கக் கூடாது. அல்லாஹ் மற்றும் ரஸூல் மீது குறை கூறுபவராக இருக்கக் கூடாது. எந்தவொரு துன்பம், தொல்லைகள் வந்தாலும் எந்தவொரு துக்கம் கஷ்டம் வந்தாலும் அவர்களுடைய வாயிலிருந்து முறையீடு கூடாது. துன்பம் மனிதனுக்கு வருவது அவனது நஃப்ஸினால் வருகிறது. இறைவன் அநீதியிழைப்பதில்லை. ஆம் உண்மையாளர்களும் துன்பங்கள் வருகின்றன. மற்றவர்கள் அதனை துன்பம் என்று கருதுகின்றனர். ஆனால் அவை உண்மையில் துன்பமாக இருப்பதில்லை. அவை ஒரு வகையில் அல்லாஹ்வின் அருள்கள் ஆகும்.

இதனால் இறைவனுடன் அவர்களின் தொடர்பு அதிகரிக்கிறது. அவர்களின் அந்தஸ்து அதிகரிக்கிறது. அதனை பிறர் புரிவதில்லை. எம் மக்களுக்கு இறைவனுடன் தொடர்பு இருப்பதில்லையோ அவருக்கு துன்பம் வந்தால் மேலும் தடுமாறிப் போகின்றனர்.

இறைவன் கூறுகிறான்: ஃபீ குலூபிஹிம் மரளுன் ஃபஸா தஹுமுல்லாஹி மர்ளா. ஆகவே எப்போதும் பயந்து கொண்டிருங்கள். இறைவனிடமிருந்து அவனது அருளைக் கேளுங்கள். இறைவனிடமிருந்து தொடர்பை துண்டித்துக் கொள்வோருடன் சேர்ந்து விடாமல் இருப்பதற்காக அவனது அருளை தேடுங்கள். ஒரு மனிதர் இறைவனால் நிலைநாட்டப்பட்ட ஜமாஅத்தில் சேருகிறார் எனில் அவன் இறைவன் மீது ஒன்றும் உபகாரம் செய்து விடவில்லை. மாறாக, அவனது அருளாலே அதில் இணைவதற்கு அம்மனிதனுக்கு வாய்ப்பு தந்தான். ஒரு சமுதாயத்தை அழித்து

விட்டு புதியதை உருவாக்க அவன் ஆற்றல் வாய்ந்தவன். இக்காலம் நூஹ் மற்றும் லூத் உடைய காலத்தை ஒத்துள்ளது. கடும் தண்டனை வந்து உலகத்தை அழித்து விடாமல் அல்லாஹ்வுடைய கருணை சீர்திருத்தம் செய்ய விரும்பியுள்ளது. இந்த இயக்கத்தை நிலைநாட்டியது. எனவே இதில் நமது பொறுப்பும் அதிகமாகும். நாம் இந்த போதனையை புரிய வேண்டும்.

கூறினார்கள்: நமது ஜமாஅத்திற்கு மிக மிக அவசியமான விஷயமாவது, அவர்கள் தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்தட்டும். அதன் மூலம் புதிய மஃரிஃபத் கிடைக்கட்டும். மஃரிஃபத் உடைய வாதம் செய்து விட்டு அதன்படி நடக்காதவர் வெறும் பேச்சு பேசுபவர் ஆவார். நமது ஜமாஅத் சோம்பேறிகளைப் பார்த்து கவனமற்று இருந்து விட வேண்டாம். உலகத்தின் முன்மாதிரியைப் பார்த்து பின்னால் போகாதீர்கள். சோம்பேறித்தனத்தில் மூழ்கிவிட வேண்டாம். அவர்களின் அன்பின் குளிர்ச்சியைப் பார்த்து உள்ளத்தை கடினமாக்க வேண்டாம். மற்றவர்களுக்கு மார்க்கத்தின் பக்கம் அல்லாஹ்விடம் அன்பு இல்லை. அதனைப் பார்த்து உங்கள் உள்ளத்தையும் கடினமாக்கிக் கொள்ள வேண்டாம். மனிதன் பெரும் விருப்பங்களையும் ஆசைகளையும் கொண்டுள்ளான். ஆனால் மறைவான இறை நியதியைப் பற்றி யாருக்குத் தெரியும்? வாழ்வு நமது ஆசைகளுக்கு ஏற்ப செல்லாது. ஆசைகள் வேறு. இறை நியதி வேறு. அதுவே உண்மையான தொடர் ஆகும். இறைவனிடம் உள்ள மனித வரலாறே உண்மையாகும். அதில் என்ன எழுதியுள்ளது என்று யாருக்குத் தெரியும்? எனவே உள்ளத்தை விழிப்பூட்டி விழிப்பூட்டி சிந்திக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு தவ்ஹீதின் புரிதிறனை வழங்குவானாக! நமது ஒவ்வொரு அமலும் இறைவனது திருப்தியைப் பெற முயல்வதாக அமையட்டுமாக!

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். அது சிரியாவைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய அப்துல் கரீம் அப்பாஸ் சாஹிப் ஆவார்கள். மே 5ம் தேதி அன்று இறை நியதிக்கேற்ப வஃபாத் ஆகி விட்டார். இவர் 2005 –ல் பைஅத் செய்தார். பின்னால் வந்து முன்னால் உள்ளவர்களுடன் போய் சேர்ந்து கொண்டார். குடும்பத்தில் தனி அஹ்மதியாக இருந்தார். 2009 –ல் வஸிய்யத் அமைப்பில் இணைந்தார். சந்தாவை முறைப்படி வழங்குபவர். கடந்த வருடம் பொருளாதார நிலை மோசமடைந்த காரணத்தால் நாட்டின் சூழ்நிலையில் தாக்கம் ஏற்பட்டது. மிக தூரத்தில் இருந்தாலும் உறவினர் கையில் சந்தாவை கொடுத்து அனுப்பி விடுபவராக இருந்தார். மர்ஹூம் சர்க்கரை நோயாளியாக இருந்தார். உடல்நிலையில் மோசமாக இருந்தார். மெலிந்த உடல் வாகு கொண்டவர். கடந்த நாட்களில் உடல் சீர்கேட்டைத் தொடர்ந்து இறைவன் முன் போய் சேர்ந்து விட்டார். கண்ணியத்திற்குரி முல்ஹிம் அஸ்அத்ஸ் சாஹிப் இவருக்கு தப்லீக் செய்தார். தனது உண்மை, பற்றின் காரணமாக விரைவில் பைஅத் செய்யும் வாய்ப்பை பெற்றார்.

எழுதுகிறார்கள்: இவர் உண்மையான முறையில் உண்மையைத் தேடுபவராகவும், மிக உயரிய ஆன்மீகவாதியாகவும் இருந்ததால், அதிகமான புத்தகங்களைப் படிக்கா விட்டாலும் ஹக் –ஐ ஏற்றுக் கொண்டார். தப்லீக் செய்த ஒரு மாதத்திலேயே பைஅத் செய்தார். பைஅத்திற்குப் பிறகு அவர் கனவில் பார்த்தார். கஅபா மஸ்ஜிதில் பெரும் சஹாபாக்களுடன் தொழுகிறார். எல்லாரும் வெள்ளை ஆடை அணிந்துள்ளனர். தொழுகை நேரத்தில் இவரது நிலை மிகவும் ஆன்மீகமாக இருந்ததாக கூறப்பட்டுள்ளது. மர்ஹூம் இந்த கனவால் மிகவும் மகிழ்ந்தார். எனது பைஅத் முடிவு சரியானது என்பதை இந்தக் கனவு நீரூபிக்கின்றது என்று கூறி வந்தார். எனினும் எளிமையின் காரணமாக உண்மையில் சஹாபாக்களுடன் சேர்ந்து தொழுவதற்கு தனக்கு தகுதி உள்ளதா என்று கேட்டு வந்தார். எங்கு சென்றாலும் தப்லீக் செய்வார். ஏச்சுப் பேச்சுக்கள் பற்றி பயப்பட மாட்டார். இந்த விஷயம் கூறத்தக்கது. அதாவது அவர் இருந்த பகுதியின் மக்கள் அவரது கொள்கைகளுக்கு மாற்றமாக சொன்னால் கேட்கத் தயாராக இருப்பதில்லை. கடும் நோயுற்ற நிலையிலும் ஆதாரங்களைக் கற்றார். மென்மையுடன் அதனை பிறருக்கு எடுத்துச் சொல்வார். மிகவும் மென்மையான உள்ளமும், மிகத் தாழ்மைக் குணமும் கொண்டவர். அவர் கூறுவதுண்டு. நோய் எனக்கு ஒரு தடையல்ல என்பதை எப்போதும் நிரூபித்து வந்தார். ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதில் பங்கெடுக்க முடியும் என்று நிரூபித்து வந்தார். தப்லீக் செய்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி கூறும் போது அவரது கண்கள் ஈரமாகி விடும். தைரியத்துடன் கூறுவார். இவ்வளவு விஷயங்களை இத்தகைய மெலிந்த மனிதர் கூற முடியுமா? என்று கேட்பவர்கள் உணரவே முடியாது. மரணத்திற்குப் பிறகு இவரது வீட்டினர் அஹ்மதி அல்லாதவராக இருந்ததால் இவரது சடலத்தை எடுத்துச் சென்று விட்டனர். அஹ்மதிகள் ஜனாஸா தொழ முடியவில்லை. எவ்வாறிருப்பினும் காயிப் ஜனாஸா தொழுதனர். இங்கும் இன்ஷா அல்லாஹ் தொழுவோம்.

***ஹானி தாஹிர் சாஹிப் எழுதுகிறார்:***

இவர் மிகவும் தூய அஹ்மதியாக இருந்தார். 2009 –ல் ஒரு website தயார் செய்ய முன் வந்தார். நேரம் குறைவாக இருந்ததால் நான் இயலாமையை தெரிவித்த போது நீங்கள் கட்டுரைகளை அனுப்புங்கள். பிறவற்றை நான் பார்த்துக் கொள்வேன் என்றார். மிக அழகான website –ஐ டிஸைன் செய்தார். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் நல்ல பிடிப்பு இருந்தது. துடிப்பை வெளிப்படுத்தினார்.

***மஜீத் ஆமிர் சாஹிப் எழுதியுள்ளார்:***

மர்ஹூம் முஹம்மது அலி பாஸ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உருது நூற்களின் அரபி மொழிபெயர்ப்பை செக்கிங் செய்வதிலும் சரிபார்ப்பதிலும் என்னோடு பணி செய்தார். மர்ஹூம் அசாதாரண இக்லாஸ் மற்றும் நுட்பமாக பணி செய்வதிலும் விரைவாக பணி செய்யும் பழக்கமும் உள்ளவர் என்றும் மிகவும் அழுத்தமாக உணர்ந்தேன். நோயின் காரணமாக பணியை சுணங்கியதில்லை. நோயைப் பற்றி சொல்லவும் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படித்து விட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஞானங்களும் போதனைகளும் விரைவில் அரபு மக்களிடம் சென்று சேர வேண்டும். அவர்களும் அதிலிருந்து பயனடைந்து ஹிதாயத் பெற வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். கிலாஃபத் மீது அன்பு கொண்டவர்.

அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! மக்ஃபிரத் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **16.05.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456